OS.No. : 60/2023

நாள் :12.12.2024

வா.சா. : 1

பெயர் : ரதிப்பிரியா

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் சித்ரா என்பவர் OS. 154/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அதில் என்னை தரப்பினராக சேர்க்க கோரி நான் மனுத்தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதற்கு பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே தாக்கல் செய்துவிட்டேன். இந்த வழக்கில் நான் மட்டுமதான் வாதி என்றால் சரி. என் மகள், மகன் உரிய வயதடைந்துவிட்டார்கள் என்றாலும் இளவர்கள் இல்லை என்றாலும் சரி. என் குடும்பத்தை பொறுத்தவரை ராமசாமி ரெட்டியார் என்பவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியும். அவர் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் அவர் என்றால் சரி. 1ம் பிரதிவாதியின் சொத்தை 1984 ல் கோர்ட் ஏலத்தில் ராமசாமி ரெட்டியார் எடுத்து தனது மகளான ரமாமணிக்கு கொடுத்துள்ளார் என்றால் தவறு. நான் 1997 ம் வருடமே 1 ம் பிரதிவாதியான என் மாமியாரை விட்டு போய்விட்டேன் என்றால் சரியல்ல. அப்போது நான் என் மகள் வயிற்றில் இருந்தாள் பிரசவத்திற்காக கடலூரில் உள்ள என் தாய் வீட்டிற்கு போனேன். பிரசவத்திற்கு பிறகு என் மாமியார் வீட்டிற்கு வந்தேன். என்னை சரியாக நடத்த வில்லை. எனக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பு இல்லை என்பதால் என் பெற்றோர் என்னை அழைத்துபோய்விட்டார்கள். நான் முதல் விசாரணை அபிடவிட்டில் என் பாண்டிச்சேரி வீட்டின் முகவரி கொடுத்துள்ளேன் என்றால் சரி. அதனால் நான் கடலூரில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் வேலை நிமித்தமாக நான் பாண்டிச்சேரிக்கு போனேன். 2 ம் பிரதிவாதி என் கணவரின் சகோதரி என்றால் சரி. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு சொத்து சம்பந்தமாக எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்பது தான் என் வழக்கு என்றால் சரி. என் மகன் ஹரிநாராயணன் பெயரில் 1ம் பிரதிவாதி சென்னையில் உள்ள ஒரு பங்களாவை செட்டில்மெண்ட் எழுதி வைத்து உள்ளார் என்றால் life interest வைத்து எழுதி வைத்துள்ளார். அது பொது குடும்ப சொத்தில் வராது.

Rathi Priya

அந்த பங்களாவின் மூலம் வரும் வருமானத்தை என் மகன் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார். அந்த பங்களாவின் மதிப்பு சுமார் 30 கோடி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 12 கோடி இருக்கும். நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. எனக்கு எவ்வளவு பாகம் என் பிள்ளைகளுக்கு எத்தனை பாகம் என்று தனித்தனியாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மொத்தமாக குறிப்பிட்டுள்ளேன். இந்த குடும்ப சொத்தை பொறுத்தளவில் 1ம் பிரதிவாதி எனக்கு பாகம் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நான் கோரும் பாகப்பிரிவினைக்கு ஈடான சொத்தான சென்னையில் உள்ள பங்களாவை என் மகனுக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரியுள்ள சொத்துக்கு ஈடான சொத்தை கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதி என் மகனுக்கு மூதாதையர் சொத்திலிருந்து கொடுக்கவேண்டிய பாகத்திற்கு ஈடாக சென்னையில் உள்ள பங்களாவை கொடுத்துவிட்டார் என்றாலும் தன் மகளான 2ம் பிரதிவாதிக்கு தன்னுடைய கணவர் சொத்தை தான் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் மகனுக்கு கொடுத்தது மூதாதையர் சொத்து இல்லை. அது 1ம் பிரதிவாதியின் பெயரில் இருந்த தனிப்பட்ட சொத்து. என் மகனுக்கு சேரவேண்டிய மூதாதையர் சொத்திற்கு ஈடான சொத்து கிடைத்து விட்டது என்றாலும் நான் அதிகமான சொத்து பெறவேண்டி இந்த வழக்கை நான் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் மகனுக்கு வழக்கு தாக்கல் செய்வதில் விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் அஞ்சாருவாத்தலையில் உள்ள ஒரு பங்களாவும் வில்லியநல்லூரில் உள்ள 10 ஏக்கர் நிலமும் தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தும் ராமசாமி ரெட்டியார் 1ம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்த சொத்து என்றாலும் அதிலும் எங்கள் யாருக்கும் எந்த பாகமும் கிடைக்க கூடியது இல்லை என்றால் தவறு. வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் என் மாமனார் சொத்துக்களை அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே விற்று வாங்கியவர் வசம் சொத்து போய்விட்டது என்றாலும் சரியல்ல. என் மாமனார் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். என் மாமியார் அவர் இறந்த பிறகு சொத்துக்களை விற்றுள்ளார். OS 157/1974 என்ற வழக்கை தனது மாமனார் மாமியாருக்கு எதிராக தாக்கல் செய்து அதன் மூலம் கொஞ்சம்

Latha Priya

சொத்து கிடைத்தது. அந்த வழக்கில் என் கணவரும் என் மூத்தாரும் தரப்பினர்கள். அதில் வந்த சொத்துக்கள் குறித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அப்படி கிடைத்த சொத்துக்களை என் கணவரும் மூத்தாரும் அவர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே 1974 முதல் 1997 க்குள் விற்று விட்டார்கள் என்றால் சரியல்ல. எனது கணவரும் மூத்தாரும் மைனராக இருக்கும்போதே என் மாமியார் அந்த சொத்துக்களை விற்றிருக்கிறார். ராமசாமி ரெட்டியார் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்துக்கள் குறித்து நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ராமசாமி ரெட்டியாருக்கு எந்த சொத்தும் இல்லை அவர் என் மாமியார் என் கணவர் என் மூத்தார் ஆகியோரின் பவர் ஏஜெண்ட் மட்டும் தான். சாட்சி மீண்டும் என் மாமியாருக்கு மட்டும் அவர் பவர் ஏஜெண்டு என்று சொல்கிறார். 2ம் பிரதிவாதி தான் 1ம் பிரதிவாதியை கவனித்து பாதுகாத்து வந்தார் என்றாலும் அதனால் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்து கொடுத்திருக்கிறார் என்றாலும் நான் அதையெல்லாம் மறைத்து விட்டு இந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க வழக்கு என்றால் சரியல்ல.

**6 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்களில் 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் இல்லை என்றால் சரி. என் கணவர் பெயர் வெங்கட்ரங்கன் என்ற ஹரீஷ். எனது மகன் பெயர் ஹரிநாராயணன். மகள் பெயர் ஹரித்தா. எனது மகன் மற்றும் மகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியிருக்கிறேன். இவ்வழக்கின் 6 முதல் 11 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்றால் சரி. இவ்வழக்கின் 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு முன்பாக அறிவிப்பு அனுப்ப வேண்டுமென்றாலும் அதுபோல் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 8ம் பிரதிவாதியான சார்பதிவாளர் சட்டத்திற்குட்பட்டு ஆவணங்களை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தவறான சங்கதிகளை தெரிவித்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. இவ்வழக்கின் 7ம் பிரதிவாதியை வழக்கின் தரப்பினராக சேர்ப்பதற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் உண்டு நாங்கள் அவருக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் DTCP Lay out approval கொடுக்ககூடாது என்று நோட்டீஸ் அனுப்பினோம். அவர் அதை பெற்றுக்கொண்டு approval கொடுக்க மாட்டேன் என்று பதில் அனுப்பினார் ஆனால் prelim approval கொடுத்துவிட்டார். அதனால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். அவர் ஆவணங்களின் அடிப்படையில் சரியாத்தான் approval கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்குரையில் சொல்லியுள்ளது போல் எந்த ஒரு approval ம் கொடுக்காமல் நிலுவையில் இல்லை என்றாலும் சட்டத்திற்கு உட்பட்டு approval கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த ஒரு பரிகாரமும் கோர முடியாது என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கை அனுமதிக்க வேண்டும்.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞருக்காக திரு. நித்தின்பாபு வழக்கறிஞர் ஆஜரானார். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

12/12/24